**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026, p24-38** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed*

# மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் வசந்தன் கூத்தின் சமூக பங்குபற்றலும் பண்பாட்டு அடையாளமும்: ஓர் ஆய்வு

Vasanthan Koothu, Cultural Identity, Social Change, Batticaloa, Religious Belief, Kannaki Amman Worship, Intangible Cultural Heritage

**பொடிமாத்தையா வேணுகா,**
*முனைவர்பட்ட ஆராய்ச்சி மாணவர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*
**Podimathaya Venuga*,**
*PhD Research Scholar, Eastern University Srilanka.*
*Email venu.venuga@gmail.com Tel: +94766060143.*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
venu.venuga@gmail.com

**Abstract:** This study examines Vasanthan Koothu as a vital folk art form and cultural symbol within the Batticaloa Tamil community, highlighting its role in fostering social unity, moral values, and cultural continuity through oral tradition and community participation, especially among youth. Grounded in UNESCO's Intangible Cultural Heritage framework and comparative analysis with regional folk traditions like Tamil Nadu's Therukoothu, the research details how Vasanthan Koothu drives social cohesion and identity formation despite modern disruptions such as wartime impacts, displacement, economic pressures, and media influence. Ultimately, the findings reaffirm Vasanthan Koothu's enduring function as a repository of collective memory and a resilient anchor of socio-cultural identity amidst changing societal dynamics.

**Keywords:** *Vasanthan Koothu, Cultural Identity, Social Change, Batticaloa, Religious Belief, Kannaki Amman Worship, Intangible Cultural Heritage.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் வசந்தன் கூத்து ஒரு முக்கியமான நாட்டுப்புறக் கலை வடிவமாகத் திகழ்கிறது. இது வெறும் பொழுதுபோக்கு நிகழ்வாக இல்லாமல், சமூக ஒற்றுமை, சடங்கு மரபுகள் மற்றும் பண்பாட்டு பரம்பரை ஆகியவற்றை உள்ளடக்கிய கலாசாரச் சின்னமாக விளங்குகிறது. குறிப்பாக கிராமத் திருவிழாக்கள், கோவில் உற்சவங்கள் போன்ற நிகழ்வுகளில் வசந்தன் கூத்து ஆற்றுகை செய்யப்படுவது சமூக உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துகிறது. இவ்வாய்வு, மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் வசந்தன் கூத்து எவ்வாறு சமூக வாழ்வியலுடன் இணைந்துள்ளது என்பதையும், காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் மற்றும் பங்கேற்பு அமைப்புகளில் ஏற்படுத்திய மாற்றங்களையும் ஆராய்கிறது.

வசந்தன் கூத்தில் இடம்பெறும் பாடல்கள், நகைச்சுவை கலந்த உரையாடல்கள் மற்றும் நடன அசைவுகள் சமூக வாழ்வியலை பிரதிபலிப்பதுடன், பாரம்பரிய நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களையும் வெளிப்படுத்துகின்றன. இக்கலை வடிவம் தலைமுறை தலைமுறையாக வாய்மொழி மரபின் மூலம் பரவியதால், சமூக நினைவகத்தையும் பண்பாட்டு தொடர்ச்சியையும் உறுதிப்படுத்துகிறது. மேலும், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கின்றது. உலகளாவிய ரீதியில் யுனெஸ்கோ முன்வைக்கும் அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரிய (Intangible Cultural Heritage) கோட்பாட்டு வரையறையின் வெளிச்சத்திலும், தமிழக தெருக்கூத்து, இலங்கையின் பிற நாட்டுக்கூத்து மரபுகளுடனான ஒப்பீட்டு நோக்கிலும் வசந்தன் கூத்தின் தனித்துவமான இடத்தையும் இவ்வாய்வு விளக்குகிறது.

இவ்வாய்வு வசந்தன் கூத்தின் சமூக பங்குபற்றலையும் அதன் பண்பாட்டு அடையாளத்தையும் ஆராய்ந்து, அது சமூக ஒருங்கிணைப்பிலும் அடையாள உருவாக்கத்திலும் வகிக்கும் பங்களிப்பை விளக்குகிறது. மாறிவரும் சமூகச் சூழலில் கூட, வசந்தன் கூத்து பாரம்பரியத்தை பாதுகாத்து சமூகத்தின் தனித்துவ அடையாளத்தை நிலைநிறுத்தும் முக்கியமான கலை வடிவமாகத் தொடர்கிறது. ஆய்வின் கண்டறிதல்கள், வசந்தன் கூத்து மட்டக்களப்பு தமிழர் சமூகத்தின் பண்பாட்டு நினைவகமாகவும் அடையாளச் சின்னமாகவும் தொடர்ந்தும் செயல்படுகின்றது என்பதைக் காட்டுகின்றன. அத்துடன், போர்க்காலப் பாதிப்புகள், இடப்பெயர்வு, பொருளாதார அழுத்தங்கள் மற்றும் நவீன ஊடகங்களின் செல்வாக்கு ஆகியவை இக்கலை மரபின் தொடர்ச்சிக்கு முன்வைக்கும் சவால்களையும், அவற்றை எதிர்கொள்ளும் சமூக-பண்பாட்டு முயற்சிகளையும் இவ்வாய்வு அடையாளம் காண்கிறது.

**திறவுச்சொற்கள்**

வசந்தன் கூத்து, பண்பாட்டு அடையாளம், சமூக மாற்றம், மட்டக்களப்பு, சமயநம்பிக்கை, கண்ணகியம்மன் வழிபாடு, அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரியம்

## 1. அறிமுகம்

இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டம், வரலாற்று ரீதியாகவும் சமூக, பண்பாட்டு ரீதியாகவும் விவசாயத்தை பொருளாதார அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகமாக விளங்குகிறது. விவசாயத்தை மையமாகக் கொண்ட இயற்கைச் சூழல்களோடு இணைந்த வாழ்வியல் நடைமுறைகள், மட்டக்களப்பு சமூகத்தின் சிந்தனை, நம்பிக்கை மற்றும் பண்பாட்டு வெளிப்பாடுகளைத் தீர்மானித்த முக்கியக் காரணிகளாக உள்ளன. இத்தகைய விவசாய அடிப்படையிலான சமூகப் பின்னணியிலேயே, வசந்தன் கூத்து ஒரு முக்கியமான கலை வடிவமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

மட்டக்களப்பு சமூகத்தில் விவசாயம் என்பது வெறும் பொருளாதாரச் செயல்பாடாக மட்டுமன்றி, சமய நம்பிக்கைகளோடும் சடங்கு நடைமுறைகளோடும் ஆழமாகப் பின்னிப்பிணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. குறிப்பாக, கண்ணகியம்மன் வழிபாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய சடங்குகள், விவசாய வாழ்வியலின் பாதுகாப்பு, வளம், மழை, விளைச்சல் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டு சமூக வாழ்வில் மையமான இடத்தைப் பெற்றுள்ளன. கண்ணகியம்மன், மட்டக்களப்பு சமூகத்தில் நீதியின், தெய்வீகப் பாதுகாப்பின் மற்றும் சமூக ஒழுங்கின் ஆதாரமாகக் கருதப்படுவதோடு, விவசாய சமூகத்தின் கூட்டு நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தெய்வமாக விளங்குகிறார்.

இந்தக் கண்ணகியம்மன் வழிபாட்டுச் சூழல்களிலேயே வசந்தன் கூத்து பெரும்பாலும் நிகழ்த்தப்படுகிறது. கோயில் திருவிழாக்கள், நேர்த்திக் கடன் சடங்குகள், அறுவடைத் தொடர்பான விழாக்கள் போன்ற சமய, சமூக நிகழ்வுகளில் வசந்தன் கூத்து இடம்பெற்று, விவசாய உழைப்பின் அர்த்தத்தையும் சமூக ஒற்றுமையையும் பண்பாட்டு வடிவில் வெளிப்படுத்தும் கருவியாக செயல்படுகிறது. கூத்தின் பாடல்கள், அசைவுகள் ஆகியவை விவசாயச் சமூகத்தின் பருவநிலை உணர்வுகள், உழைப்பின் மேன்மை, தெய்வ அருள் குறித்த நம்பிக்கைகள் மற்றும் சமூகக் கடமைகள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

விவசாயம், கண்ணகியம்மன் சடங்கு, வசந்தன் கூத்து ஆகிய மூன்றிற்குமிடையிலான பரஸ்பர உறவை காண முடிகிறது. வசந்தன் கூத்து, விவசாய சமூகத்தின் வாழ்வியல் தேவைகளிலிருந்து எவ்வாறு தோற்றம் பெற்றது, கண்ணகியம்மன் சடங்குகளின் ஒரு அங்கமாக அது எவ்வாறு

உள்ளடக்கப்பட்டது, மேலும் இச்சடங்கு கலை நடைமுறைகள் சமூக ஒழுங்கு, பண்பாடுகள் மற்றும் மரபுத் தொடர்ச்சியை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன என்பன இந்த ஆய்வின் முக்கிய ஆய்வுக் கவனங்களாக அமைகின்றன.

நவீன காலத்தில் விவசாய பொருளாதார மாற்றங்கள், சமூக பொருளாதார அழுத்தங்கள் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள், வசந்தன் கூத்துக்கும் கண்ணகியம்மன் சடங்குகளுக்கும் இடையிலான பாரம்பரிய உறவை எவ்வாறு மாற்றியமைத்துள்ளன என்பதையும் இந்த ஆய்வு ஆராய்கிறது. இவ்வாறு, விவசாய பொருளாதாரத்தையும் கண்ணகியம்மன் வழிபாட்டையும் மையமாகக் கொண்டு வசந்தன் கூத்தைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், மட்டக்களப்பு சமூகத்தின் பண்பாட்டு கட்டமைப்பையும் கிராமியக் கலை மரபுகளின் சமூகப் பொருளையும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும், மட்டக்களப்புத் தொல்தமிழ் மரபுரிமைப் பிரதேசமாகக் கருதப்படும் இப்பிரதேசத்தின் தனித்துவமான நிலவியல், வாய்மொழி இலக்கியப் பாரம்பரியம் ஆகியவற்றுடன் இணைந்தே வசந்தன் கூத்தும் அதன் சமூகப் பங்கும் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

**2. ஆய்வு நோக்கமும் ஆய்வுவினாக்களும்**

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது:

1. மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் வசந்தன் கூத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பெயர்க்காரணத்தை ஆராய்தல்.
2. வசந்தன் கூத்துக்கும் விவசாயப் பொருளாதாரத்திற்கும், கண்ணகியம்மன் வழிபாட்டு மரபிற்கும் இடையிலான உறவை பகுப்பாய்வு செய்தல்.
3. வசந்தன் கூத்து சமூக ஒருங்கிணைப்பிற்கும் பண்பாட்டு அடையாள உருவாக்கத்திற்கும் எவ்வாறு பங்களிக்கின்றது என்பதை மதிப்பீடு செய்தல்.
4. நவீன சமூக, பொருளாதார மாற்றங்கள் இக்கலை மரபின் தொடர்ச்சியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அடையாளம் காணல்.

இவ்வாய்வு பின்வரும் கேள்விகளுக்கு விடை காணமுற்படுகிறது: வசந்தன் கூத்து மட்டக்களப்பு சமூகத்தின் சமூக அமைப்புடன் எவ்வாறு பிணைந்துள்ளது? அது சமூக உறவாடலையும் பண்பாட்டு அடையாளத்தையும் எவ்வாறு வலுப்படுத்துகிறது? காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் இதன் சமூகப் பங்கை எவ்வாறு மாற்றியமைத்துள்ளன?

**3. ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு தரமான ஆய்வு முறையியலை (Qualitative Research Method) அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இதற்கான தரவுகள் இரு முதன்மை மூலங்களிலிருந்து

திரட்டப்பட்டுள்ளன. முதலாவதாக, வசந்தன் கூத்து, மட்டக்களப்பு நாட்டார் இலக்கியம், கண்ணகியம்மன் வழிபாடு தொடர்பான வெளியிடப்பட்ட நூல்கள், கட்டுரைகள் மற்றும் ஆய்வேடுகள் நூலக ஆய்வு (Library Research) முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவதாக, வசந்தன் கூத்து அரங்கேற்ற நிகழ்வொன்றில் நேரடியாகப் பங்கேற்ற பார்வையாளர் ஒருவரின் அனுபவப் பகிர்வு களப்பணி அவதானிப்பு (Field Observation) முறையில் இணைக்கப்பட்டு, சமூக உறவாடல் தொடர்பான தரவாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒப்பீட்டு நோக்கில் தமிழக தெருக்கூத்து மற்றும் இலங்கையின் பிற நாட்டுக்கூத்து மரபுகள் தொடர்பான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆய்வுகளும் இணைந்து பரிசீலிக்கப்பட்டுள்ளன. மார்க்சிய அடிக்கட்டுமான-மேல்கட்டுமானக் கோட்பாடும், யுனெஸ்கோவின் அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரியக் கோட்பாட்டு வரையறையும் இவ்வாய்வின் பகுப்பாய்வு கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4. வசந்தன் கூத்தின் தோற்றமும் பெயர்க்காரணமும்

வசந்தன் கூத்து என்பது மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் சிறப்பிடம் பெற்ற பாரம்பரிய நாட்டுக் கலைவடிவமாகும். பல புலவர்களால் இயற்றப்பட்ட வசந்தன் பாடல்கள், வேளாண்மை வசந்தன், கும்மி வசந்தன், குறத்தி வசந்தன், களரி வசந்தன் போன்றவை ஒவ்வொன்றும் தனித்தனி கருப்பொருள்களை உடையவையாக இருந்தாலும், அவை அனைத்தும் "வசந்தன்" என்ற சொல்லில் முடிவடைவதால் இக்கூத்து "வசந்தன் கூத்து" என அழைக்கப்படுகிறது.

"வசந்தன்" என்ற சொல்லின் பொருள் குறித்து ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சிலர் இதனை வசந்தகாலத்துடன் தொடர்புபடுத்தினாலும், மட்டக்களப்பின் நில இயல்பை முன்னிறுத்தி அது காலத்தை ஒட்டிய பெயராக இருக்காது எனவும் கூறப்படுகின்றது. கு.ஓ. நடராசா மற்றும் வி.சீ. கந்தையா ஆகியோர், "வசந்தன்" என்பது காலத்தை குறிக்காது மாறாக "இன்பம்", "மகிழ்ச்சி", "நிறைவு" போன்ற கருத்துகளை வெளிப்படுத்தும் சொல்லாக இருக்கலாம் என விளக்குகின்றனர். விபுலானந்த அடிகள் அவர்கள், வசந்தன் பாடல்களின் இலக்கியப் பண்பையும், நிலச்சார் செய்திகளையும் சுட்டிக்காட்டுகின்றார் (கந்தையா).

மட்டக்களப்பு மக்களின் வேளாண்மை வாழ்வியலில் அறுவடை முடிந்தபின் ஏற்படும் இன்பநிறை காலப்பகுதியில் கோயில் திருவிழாக்கள் மற்றும் கலை நிகழ்வுகளுடன் வசந்தன் கூத்து இணைந்து நடைபெறுகிறது. குறிப்பாக பத்தினி, கணபதி, முருகன் போன்ற தெய்வ வழிபாடுகளின் போது இக்கூத்து ஒரு கொண்டாட்ட நிகழ்வாக ஆடப்படுகிறது. இதன் மூலம், கண்ணகியின் சீற்றத்தை அடக்கி மகிழ்ச்சி ஏற்படுத்தும் சடங்கு சார்ந்த கலைவடிவமாகவும் இது கருதப்படுகிறது.

எனவே, வசந்தன் கூத்து என்பது காலநிலை சார்ந்த பெயரல்ல; அது மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி,

சமூக ஒற்றுமை, மற்றும் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தும் முக்கியமான நாட்டுக் கலை வடிவமாகும்.

**5. மட்டக்களப்பு விவசாயப் பொருளாதாரமும் கண்ணகியம்மன் வழிபாடும்**

வசந்தன் கூத்து மக்கள் வாழ்க்கையின் ஒரு அங்கமாக விளங்குகிறது. இதன் மூலம் சமூக ஒற்றுமை, சாதி வேறுபாடுகள் ஆகியவை வெளிப்படுகின்றன. கூத்து, கிராமிய மக்களின் குரலாக இருந்து, அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் நம்பிக்கையையும் மேடையில் வெளிப்படுத்துகிறது.

ஒரு சமூகத்தின் கலை, இலக்கிய, வழிபாட்டு மரபுகள் அதன் பொருளாதார அடிக்கட்டுமானத்திலிருந்தே உருவாகின்றன என்பது சமூக, பண்பாட்டு ஆய்வுகளில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாகும். குறிப்பாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய சமூகங்களில், உற்பத்தி முறைகளும் இயற்கைச் சூழலும் சமூக வாழ்வின் கட்டமைப்பையும் பண்பாட்டு வெளிப்பாடுகளையும் தீர்மானிக்கின்றன. அந்த வகையில், மட்டக்களப்புப் பகுதியின் பாரம்பரிய நிலமானிய விவசாய அமைப்பு, தனித்துவமான வாய்மொழிப் பாடல் மரபுகள், நாட்டார் கலை வடிவங்கள் மற்றும் சடங்கு வழிபாட்டு முறைகளை உருவாக்கிய அடிப்படைச் சூழலாக விளங்கியுள்ளது.

விவசாயப் பணிகளுக்கிடையிலான ஓய்வுக் காலங்களும் விழாக்காலங்களும் நாட்டார் கலை வளர்ச்சிக்கான முக்கிய வெளிகளாக அமைந்தன. வசந்தன் கூத்து, வடமோடி, தென்மோடிக் கூத்து போன்ற நாட்டார் நாடகக் கலை வடிவங்களும், கும்மி, கரகம் போன்ற குழு நடனங்களும் விவசாயச் சமூகத்தின் வாழ்வியல் அனுபவங்களிலிருந்தே தோற்றம் பெற்றன. இக்கலை வடிவங்கள் பொழுதுபோக்கு அம்சத்தை மட்டும் அல்லாமல், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் கருவிகளாகவும், பண்பாட்டு நினைவுகளைத் தலைமுறைதோறும் பரிமாறும் ஊடகங்களாகவும் செயல்பட்டன.

மேலும், மழை வளம், பயிர் விளைச்சல் போன்ற தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் பல்வேறு சடங்கு வழிபாட்டு முறைகள் உருவாயின. இச்சடங்குகள் மனிதன், இயற்கை மற்றும் தெய்வம் ஆகிய மூன்றுக்கும் இடையிலான உறவுமுறையை வலுப்படுத்தும் சமூகச் செயல்பாடுகளாக அமைந்தன. விவசாயப் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளும் உளவியல் ஆதரவாகவும், சமூக ஒழுங்கை நிலைநாட்டும் பண்பாட்டு கருவியாகவும் சடங்கு வழிபாடுகள் செயல்பட்டன.

வரலாற்று ஆவணங்களின்படி, மட்டக்களப்பு பிராந்தியத்தில் கண்ணகி வழிபாடு தொன்மையான ஒரு மரபாகும். வட்டப்பளை, தம்பிலுவில் உள்ளிட்ட பல கண்ணகி அம்மன் கோயில்கள், நாகர் இனக் குழுக்களின் தாய்த் தெய்வ வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாகவும் கருதப்படுகின்றன.

வைகாசி மாத "கதவு திறத்தல்" விழா, "அம்மன் குளிர்த்தி" போன்ற சடங்கு நிகழ்வுகள் இன்றும் மட்டக்களப்பு கண்ணகி வழிபாட்டு மரபில் தொடர்கின்றன; இவ்வழிபாட்டு விழாக்களின் ஒரு அங்கமாகவே பல இடங்களில் வசந்தன் கூத்தும் இணைந்து ஆடப்படுகிறது ("Thambiluvil Kannaki Amman Temple").

ஆகவே, மட்டக்களப்பின் பாரம்பரிய விவசாய அமைப்பு தனித்தனி பண்பாட்டு கூறுகளை உருவாக்கியதாக அல்லாமல், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய வாய்மொழிப் பாடல் மரபு, நாட்டார் கலை மரபு மற்றும் சடங்கு வழிபாட்டு மரபுகளை ஒருங்கிணைத்த ஒரு முழுமையான பண்பாட்டு அமைப்பை உருவாக்கியதாக இவ்வாய்வு நிறுவுகிறது. இவ்வொருங்கிணைந்த பண்பாட்டு அமைப்பு, மட்டக்களப்புச் சமூகத்தின் வரலாற்று நினைவையும், வாழ்வியல் அடையாளத்தையும் புரிந்துகொள்ளும் முக்கியச் சான்றாக விளங்குகிறது.

**6. கோட்பாட்டு அடிப்படை: மார்க்சிய அடிக்கட்டுமான-மேல்கட்டுமானக் கோட்பாடு**

மார்க்சிய சமூகக் கோட்பாட்டின் அடிப்படையில், பொருளாதார அடிக்கட்டுமானமே கலை, இலக்கியம், மதம், வழிபாடு போன்ற மேல்கட்டுமான கூறுகளை உருவாக்குகிறது எனக் கருதப்படுகிறது. இக்கோட்பாட்டை மட்டக்களப்பின் பாரம்பரிய விவசாயச் சமூகத்துடன் இணைத்துப் பார்க்கும்போது, விவசாய உற்பத்தி முறைகளே அங்குள்ள பண்பாட்டு வெளிப்பாடுகளை வடிவமைத்துள்ளன என்பது தெளிவாகிறது. விதைப்பு, அறுவடை போன்ற விவசாயச் செய்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், உழைப்பின் சலிப்பை போக்கவும், உழைப்பாளர்களிடையே ஒற்றுமையையும் மன உறுதியையும் வளர்க்கவும் வாய்மொழிப் பாடல்கள் பாடப்பட்டன. இவ்வாய்மொழிப் பாடல்கள் விவசாயிகளின் வாழ்க்கை அனுபவங்களையும், இயற்கையுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவையும் வெளிப்படுத்தும் சமூக ஆவணங்களாகவும் செயல்பட்டுள்ளன.

எனினும், மார்க்சிய அடிக்கட்டுமான-மேல்கட்டுமானக் கோட்பாடு மட்டும் வசந்தன் கூத்தின் முழுமையான சமூகப் பொருளை விளக்கிவிட முடியாது. ஏனெனில், சமகால நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் (Cultural Studies), கலை மரபுகளை வெறும் பொருளாதார விளைவாக மட்டும் காணாமல், அவை சமூக அடையாளத்தை உருவாக்கும் செயற்திறன் மிக்க (agentive) கருவிகளாகவும் செயல்படுவதை வலியுறுத்துகின்றன. அந்த வகையில், வசந்தன் கூத்து பொருளாதார அடித்தளத்தின் விளைபொருள் மட்டுமன்றி, சமூக உறவுகளை மறுவரையறை செய்யும், பண்பாட்டு அடையாளத்தைத் தொடர்ந்து புதுப்பிக்கும் ஒரு செயலூக்கமான (dynamic) பண்பாட்டுக் கருவியாகவும் இயங்குகிறது என்பதை இவ்வாய்வு முன்வைக்கிறது.

### 7. சடங்கு இலக்கியமும் வாய்மொழி மரபும்: கண்ணகி அம்மன் மழைக்காவியமும் வதனமார் பாடல்களும்

சடங்கு வழிபாட்டு மரபுகள், வெறும் ஆன்மீக நம்பிக்கைகளின் வெளிப்பாடாக மட்டுமன்றி, விவசாயப் பொருளாதார அமைப்பின் தேவைகளுக்கேற்ப உருவான சமூகச் செயல்பாடுகளாகவும் விளங்குகின்றன. இச்சடங்குகளில் பயன்படுத்தப்பட்ட மந்திரங்களும், வழிபாட்டிற்கென இயற்றப்பட்ட பாடல்களும், மக்கள் அனுபவிக்கும் இயற்கைச் சிக்கல்களுக்கும் சமூகத் தேவைகளுக்கும் நேரடியாகத் தொடர்புடையவையாக அமைந்துள்ளன. மழை வேண்டுதல், வேளாண்மை வளம், இயற்கைச் செழிப்பு, நோய் நீக்கம் போன்ற வேண்டுதல்கள், நேரடி பிரார்த்தனைகளாக இல்லாமல், இலக்கிய வடிவம் பெற்ற பாடல்கள் வழியாகச் சமூகப் பண்பாட்டில் நிலைபெற்றுள்ளன.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படுவது "கண்ணகி அம்மன் மழைக்காவியம்" ஆகும். இக்காவியம், மழையின்மையால் விளையும் நில வளக் குறைவு, பயிர் நாசம், உணவுப் பற்றாக்குறை போன்ற நிலைகளையும், அவற்றால் மக்கள் அனுபவிக்கும் துயரங்களையும் உணர்வுப் பூர்வமாக எடுத்துரைக்கிறது. அதே சமயம், கண்ணகியம்மனை நோக்கி மழை வழங்கி மக்களின் வாழ்வை மீட்டருளுமாறு வேண்டி நிற்கும் இந்தப் பாடல், ஒரு தெய்வ வழிபாட்டு உரையாக மட்டுமன்றி, சமூக வாழ்வின் அடிப்படைத் தேவைகளை முன்வைக்கும் மனிதநேயப் புனைவாகவும் விளங்குகிறது.

அதேபோன்று, வதனமார் என்ற தெய்வத்தை முன்னிறுத்தி இயற்றப்பட்ட பாடல்கள், விவசாயத்துடன் நேரடியாக தொடர்புடைய கால்நடை வளத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. உழவு உள்ளிட்ட வேளாண்மைச் செயல்பாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கும் மாடுகளின் நலன், பெருக்கம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வேண்டி இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இதன் மூலம், தெய்வ வழிபாடு மனிதனின் அன்றாட வாழ்வாதாரப் பாதுகாப்போடு எவ்வாறு இணைந்திருந்தது என்பதையும், சடங்கு இலக்கியங்கள் சமூகப் பொருளாதாரச் சூழலை பிரதிபலிக்கும் ஆவணங்களாகச் செயல்படுகின்றன என்பதையும் உணர முடிகிறது.

இவ்வாறாக மட்டக்களப்பின் சடங்குசார் பாடல்கள், வெளிப்படையாகப் பக்தி நோக்கை முன்னிறுத்தினாலும், அதன் அடிநாதமாக மனித வாழ்வின் நலன், சமூக நிலைத்தன்மை மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஆகிய மானுடவாதக் கருத்துக்களையே முன்வைக்கின்றன. ஆகவே, இச்சடங்கு பாடல்கள் தெய்வ நம்பிக்கையின் வெளிப்பாடாக மட்டுமன்றி, பாரம்பரிய விவசாயச் சமூகத்தின் வாழ்வியலைப் பதிவு செய்யும் இலக்கியச் சான்றுகளாகவும், நாட்டார் இலக்கியத்தின்

முக்கியமான ஆய்வுப் பொருள்களாகவும் கருதப்பட வேண்டியவையாக உள்ளன.

வசந்தன் பாடல்கள், நாட்டார் இலக்கியத்தில் தோன்றிய புதிய வெளிப்பாட்டு வடிவங்களுக்கு முக்கியமான எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. சடங்கு மரபுகளை அடித்தளமாகக் கொண்டு உருவான தனித்துவமான இலக்கியத் தொகுப்பாக வசந்தன் கவிகள் விளங்குகின்றன. இவை பாடலாகவும் கூத்தாகவும் மக்களிடையே தொடர்ந்து பயிலப்பட்டு வருகின்றன. குறிப்பாக கண்ணகியம்மன் சடங்கின்போதும், மழை வேண்டி கண்ணகியிடம் நிகழ்த்தப்படும் கொம்புமுறிச் சடங்கின்போதும், வசந்தன் பாடல்கள் பாடப்பட்டும் ஆடப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் கிராமியக் கலைகள் உருவாகவும் நிலைத்துப் பயிலவும் சடங்கு மரபுகள் எவ்வளவு முக்கியப் பங்காற்றியுள்ளன என்பது தெளிவாகிறது. வசந்தன் கவிகளின் தோற்றம் விவசாய வாழ்க்கையை மையமாகக் கொண்டது என்பதையும், அவை கண்ணகி சடங்குடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு மட்டுமன்றி, பாடல்களில் வெளிப்படும் பாரம்பரிய விவசாய நடைமுறைகள் மற்றும் மரபுச் சிந்தனைகளின் வழியாகவும் அறிய முடிகிறது.

இவ்வசந்தன் பாடல்கள் வழக்கமான நியமப்பட்ட வாய்மொழிப் பாடல் வகைகளில் அடங்காதவை என்றாலும், மட்டக்களப்பின் நாட்டார் இலக்கிய மரபில் ஒரு முக்கியமான தொகுதியாகக் கருதப்படுகின்றன. இதற்குக் காரணமாக அவற்றின் தனித்துவமான நாட்டார் இசை அமைப்பு அமைந்துள்ளது. பொதுவாகவே சடங்குசார் பாடல்கள், மட்டக்களப்பு மண்ணுக்கே உரிய தனிப்பட்ட இசை மரபை உருவாக்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**8. வசந்தன் கூத்தில் சமூக உறவாடலும் சமூக ஒருங்கிணைப்பும்**

வசந்தன் கூத்து சதங்கை அணிவிழா நிகழ்வில், சமூகத்தின் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடியிருந்தனர். இவ்விளைவு, நிகழ்வின் போக்கில் இயல்பான மகிழ்ச்சியையும் சமூக நெருக்கத்தையும் உருவாக்கியது. நிகழ்விற்கு வருகை தந்தவர்களில் பெரும்பாலானோர், ஆரம்பத்தில் ஒருவரையொருவர் அறியாதவர்களாக இருந்தபோதும், கூத்து நிறைவடைந்து அவர்கள் திரும்பும் வேளையில், ஒருவரின் அனுபவங்களையும் மற்றொருவரின் சமூகப் பின்னணியையும் புரிந்துணர்ந்தவர்களாக மாறியிருந்தனர்.

ஒரு பல்கலைக்கழக மாணவி இதனை விளக்கும்போது, நிகழ்விற்கு வருகை தரும்போது தனக்கு தன் நண்பர்கள் மட்டுமே அறிமுகமாக இருந்ததாகவும், ஆனால் வசந்தன் கூத்து அரங்கேற்றத்தை நேரில் கண்டு அதன் அனுபவத்தை பெற்ற பின்னர், இச்சமூகத்தின் வாழ்க்கை முறை, பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் இங்கு நிலவும் பாரம்பரியக் கலை வடிவங்கள் குறித்து விரிவான புரிதலைப் பெற்றதாகவும், குறிப்பாக வசந்தன் கூத்து நாடக அரங்கேற்றம் தொடர்பான தகவல்கள் முழுமையாக அறியக் கிடைத்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இந்த அனுபவப் பகிர்வு, வசந்தன் கூத்து வெறும் கலை நிகழ்வாக மட்டுமல்லாது, வெளியிலிருந்து வருகை தரும் நபர்களையும் இயல்பாகவே அந்த சமூகத்தோடு இணைத்துக்கொள்ளும் சமூக உறவாடல் மேடையாகச் செயல்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவ்வகையில், வசந்தன் கூத்து சமூக ஒருங்கிணைப்பு, பண்பாட்டு பரிமாற்றம் மற்றும் சமூகப் புரிதல் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் ஒரு பாரம்பரியக் கலை வடிவமாக விளங்குகிறது. இது, சமூகவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடும் "பொது இடங்களில் நிகழும் பண்பாட்டுச் செயல்பாடு சமூக மூலதனத்தை (Social Capital) வளர்க்கும்" எனும் கோட்பாட்டு நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

**9. கலாமன்றங்களினதும் கலைச் செயற்பாட்டாளர்களினதும் ஒன்றிணைவு**

மட்டக்களப்பு பிரதேசத்தில் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து வளர்த்துவரும் பல்வேறு கலை மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. இம்மன்றங்களின் பிரதிநிதிகள் வசந்தன் கூத்து அரங்கேற்றத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். ஆலய நிருவாகத்தினருடன் இணைந்து, கலை மன்றங்களும் இந்நிகழ்வில் தங்களால் முடிந்த பங்களிப்பை வழங்கியிருந்தன.

ஒரே ஒரு கிராமத்தின் கலை நிகழ்வாக மட்டுமன்றி, களுதாவளை, தேற்றாத்தீவு, களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், வந்தாறுமூலை போன்ற பல கிராமங்களைச் சேர்ந்த கலை மன்றங்களும் கலைச் செயற்பாட்டாளர்களும் வருகை தந்து, வசந்தன் கூத்தை ரசித்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். இது வசந்தன் கூத்து ஒரு கிராம எல்லையைத் தாண்டி, பிராந்திய அடையாளக் கலை வடிவமாகத் திகழ்கின்றதனை வெளிப்படுத்துகிறது.

வசந்தன் கூத்து ஆற்றுகையில் பங்கேற்ற இளைய கலைஞர்களை, வருகை தந்த கலை மன்றங்கள் தத்தமது அமைப்புகளின் சார்பில் பாராட்டியும் வாழ்த்தியும் ஊக்குவித்தன. குறிப்பாக சிறுவர்களின் பங்கேற்புடன் வசந்தன் கூத்து மேடையேற்றப்பட்டமை, பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியது. இதன் வாயிலாக களுதாவளை, தேற்றாத்தீவு போன்ற பிரதேச மக்கள் கலை மீது கொண்ட ஆர்வம், சமூக ஈடுபாடு மற்றும் பாரம்பரியக் கலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு வெளிப்பட்டது. இவ்வாறான ஒன்றிணைவு, வசந்தன் கூத்து சமூக ஒற்றுமையை உருவாக்கும் ஒரு வலுவான பண்பாட்டு ஊடகமாகச் செயல்படுகின்றதைத் தெளிவுபடுத்துகிறது.

**10. ஒப்பீட்டுப் பார்வை: தமிழக தெருக்கூத்தும் இலங்கை நாட்டுக்கூத்து மரபுகளும்**

வசந்தன் கூத்தின் சமூகச் செயற்பாட்டை விளங்கிக்கொள்ள, அதனை பிற தமிழ்ப் பேசும் பிராந்தியங்களின் நாட்டுக்கூத்து மரபுகளுடன் ஒப்பிட்டு நோக்குவது பயனுடையதாகும். தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படும் தெருக்கூத்து (Therukoothu), பெரும்பாலும் திரௌபதி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும், அறுவடை வளத்திற்கும் நோய் நீக்கத்திற்கும்

நேர்த்திக்கடனாகவும் ஆடப்படுகிறது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மகாபாரதக் கதைகளை மையமாகக் கொண்ட தெருக்கூத்தில், கட்டியக்காரன் எனும் பாத்திரம் மூலம் நிகழ்த்தப்படும் உரையாடல் வடிவிலான சமய போதனை (Dialogic Vernacular Hinduism), பார்வையாளர்களுடன் நேரடி தொடர்பைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம், மட்டக்களப்பையும் வன்னிப் பிரதேசத்தையும் மையமாகக் கொண்ட ஈழத்துக் கூத்து மரபு, தென்மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து போன்ற பாணிகளிலும், வசந்தன் கூத்து போன்ற தனிச் சிறப்புமிக்க வடிவங்களிலும் இன்றும் உயிர்ப்புடன் தொடர்கிறது. பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, சி. சிவத்தம்பி, சி. மௌனகுரு உள்ளிட்ட பல அறிஞர்கள் இம்மரபின் கல்விசார் ஆய்வுக்கும் புத்துயிர்ப்பிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்துள்ளனர். தமிழ்நாட்டில் சாதிய முத்திரையுடன் தொடர்புபடுத்தப்பட்டு படிப்படியாக வீழ்ச்சியடைந்து வரும் நாட்டுக்கூத்து மரபுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையின் கிழக்குப் பகுதியில் — குறிப்பாக மட்டக்களப்பில் — கல்வித் திட்டங்களிலும் பாடத்திட்டங்களிலும் நாட்டுப்புறக் கலைகள் இணைக்கப்பட்டிருப்பது, இம்மரபு ஒப்பீட்டளவில் உயிர்ப்புடன் தொடர காரணமாக அமைந்துள்ளது.

மேலும், சிங்கள பாரம்பரியத்தில் காணப்படும் சொக்கரி நாடகம், கோலம் நாடகம் ஆகியவையும், தமிழ்-சிங்கள கலாசாரப் பரிமாற்றத்தின் விளைவாக உருவான நாடகம் எனும் நாடக வடிவமும், இலங்கையின் நாட்டுப்புற அரங்க மரபு இனவேறுபாடுகளைக் கடந்து ஒரு பொதுவான பண்பாட்டுச் செயல்பாட்டு அமைப்பைக் கொண்டிருந்ததை உணர்த்துகின்றன. இச்சிங்கள கூத்து மரபுகளும், வசந்தன் கூத்தைப் போலவே, சமூக விமர்சனத்தையும் நகைச்சுவையையும் ஊடகமாகக் கொண்டு சாதிய படிநிலைகளையும் சமூக ஒழுங்கையும் மேடையில் எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வொப்பீட்டு நோக்கு, வசந்தன் கூத்து தனித்துவமான உள்ளூர்ப் பண்பையும் பரந்த தென்னாசியக் கூத்து மரபின் பொதுக் கூறுகளையும் ஒருங்கே கொண்டுள்ள ஒரு கலை வடிவம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

### 11. அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரியமும் பாதுகாப்பும்

2003ஆம் ஆண்டு யுனெஸ்கோ ஏற்றுக்கொண்ட அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரிய (Intangible Cultural Heritage) மாநாட்டு வரையறையின்படி, வாய்மொழி மரபுகள், நிகழ்த்துக் கலைகள், சமூகப் பழக்கவழக்கங்கள், சடங்கு விழாக்கள் ஆகியவை சமூகங்களால் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் "உயிருள்ள பாரம்பரியமாக" (Living Heritage) அடையாளப்படுத்தப்படுகின்றன. இத்தகைய பாரம்பரியம் சமூகங்களுக்கு அடையாளத்தையும் தொடர்ச்சியையும் வழங்குவதுடன், சமூக ஒற்றுமையையும் பொறுப்புணர்வையும் வளர்க்கின்றது என யுனெஸ்கோ சுட்டிக்காட்டுகிறது. இக்கோட்பாட்டு வரையறையின் அடிப்படையில்

நோக்கும்போது, வசந்தன் கூத்து மட்டக்களப்பு தமிழர் சமூகத்தின் ஒரு தலைசிறந்த அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரிய வெளிப்பாடாகக் கருதப்பட வேண்டியதாகும்.

மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் நாடகக் கலைத் துறை, வசந்தன் கூத்து உள்ளிட்ட நாட்டுப்புற அரங்க மரபுகளைக் கல்விச் சூழலுக்குள் கொண்டு வந்து, இளந்தலைமுறையினரிடையே இம்மரபுகள் குறித்த ஆர்வத்தையும் அறிவையும் வளர்க்கும் நிறுவனமயமான முயற்சியாகச் செயல்படுகிறது. இது தவிர, உள்ளூர்க் கலா மன்றங்கள், கோயில் நிருவாகங்கள் ஆகியவை இணைந்து நடத்தும் கூத்து அரங்கேற்ற நிகழ்வுகளும், சிறுவர்-இளையோர் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையிலான பயிற்சி முயற்சிகளும், இப்பாரம்பரியத்தின் வாய்மொழிக் கடத்தலை (Oral Transmission) உறுதி செய்யும் முக்கிய சமூக வழிமுறைகளாக அமைந்துள்ளன.

எனினும், அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரியப் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது போல், வெப்பமண்டல காலநிலைச் சூழல், ஆவணப்படுத்தல் வளங்களின் பற்றாக்குறை, மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதில் உள்ள சவால்கள் ஆகியவை இலங்கையின் நாட்டுப்புறக் கலை மரபுகளுக்குப் பொதுவான அச்சுறுத்தல்களாக உள்ளன. இந்நிலையில், வசந்தன் கூத்தை முறையாக ஆவணப்படுத்தலும், அதனைக் கல்வித் திட்டங்களுடனும் சமூக நிகழ்வுகளுடனும் தொடர்ந்து இணைத்து வைத்திருத்தலும், இம்மரபின் நீடித்த தொடர்ச்சிக்கு இன்றியமையாதவையாக அமைகின்றன.

**12. நவீன சவால்களும் மாற்றங்களும்**

நவீன காலத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் வசந்தன் கூத்தின் பாரம்பரிய அமைப்பிலும் அதன் சமூகப் பங்கிலும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையில் நீண்டகாலம் நீடித்த உள்நாட்டுப் போரும் அதனை அடுத்து ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், மட்டக்களப்பு பிரதேச மக்களின் பாரம்பரிய கிராமிய வாழ்வியல் அமைப்பையும், கூட்டு சமூக நிகழ்வுகளாக நடைபெற்று வந்த கலை நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியையும் பாதித்துள்ளன.

அத்துடன், விவசாயத்தை மையமாகக் கொண்ட பாரம்பரிய பொருளாதார அமைப்பிலிருந்து, கூலி வேலைவாய்ப்பு, புலம்பெயர்வு, நகர்மயமாக்கல் ஆகியவற்றை நோக்கிய பொருளாதார மாற்றம், கூத்து மரபுக்குப் பின்னணியாக இருந்த விவசாய அடிக்கட்டுமானத்தை பலவீனப்படுத்தியுள்ளது. இளையோர் பலர் வேலை தேடி வெளிநாடுகளுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடம்பெயர்வதால், கூத்து பயிற்சி பெறவும் அரங்கேற்றங்களில் பங்கேற்கவும் கிடைக்கும் காலமும் ஆர்வமும் குறைந்து வருகின்றன.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.03**

தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் பொழுதுபோக்கு வடிவங்களின் பரவலான வருகையும், பாரம்பரிய இரவு முழுவதும் நடைபெறும் கூத்து நிகழ்வுகளின் பார்வையாளர் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது எனலாம். இந்நிலையில், சில கலைஞர்களும் கலா மன்றங்களும் கூத்தின் காலஅளவைச் சுருக்கியும், நவீன ஒலி-ஒளி அமைப்புகளைப் பயன்படுத்தியும், நகர்ப்புற அரங்குகளில் நிகழ்த்தியும் இம்மரபைப் புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய தகவமைப்புகள் பாரம்பரிய வடிவத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும், கூத்தின் அடிப்படை சமூகச் செயல்பாட்டையும் பண்பாட்டு அடையாளத்தையும் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியாகவே கருதப்பட வேண்டும்.

இச்சவால்களுக்கு மத்தியிலும், கோயில் திருவிழாக்கள், நேர்த்திக் கடன் சடங்குகள் ஆகியவற்றுடன் இணைந்த வசந்தன் கூத்தின் சமய-சடங்குப் பரிமாணம், அதன் தொடர்ச்சிக்கு ஒரு உறுதியான ஆதாரமாக விளங்குகிறது. ஏனெனில் சமய நம்பிக்கை மற்றும் சடங்கு கடமை உணர்வுடன் பிணைந்த கலை மரபுகள், வெறும் பொழுதுபோக்கு நோக்கில் மட்டும் அமைந்த கலை வடிவங்களை விட ஒப்பீட்டளவில் நீடித்து நிலைத்திருக்கும் தன்மை கொண்டவை என்பது நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் அறியப்பட்ட ஒரு உண்மையாகும்.

**13. முடிவுரை**

மட்டக்களப்பு தமிழர் சமூகத்தில் வசந்தன் கூத்து ஒரு கலை செயல்பாடு மட்டுமல்லாது, அது சமூக பங்குபற்றலை ஊக்குவித்து, குடும்பங்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு ஒருங்கிணைந்த உறவுகளை உருவாக்கும் கருவியாகும். இதன் மூலம் சமூக ஒற்றுமை நிலைபெறும். அதே நேரத்தில், இது தமிழர் பாரம்பரியத்தையும் கலாச்சார அடையாளத்தையும் பரப்பி பாதுகாக்கும் முக்கிய வழியாகும். காலப்போக்கில் நிகழ்ச்சி வடிவங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும், இது பாரம்பரியத்தின் தொடர்ச்சியையும் வலுப்படுத்துகிறது.

விவசாய அடிக்கட்டுமானத்திலிருந்து தோற்றம் பெற்று, கண்ணகியம்மன் வழிபாட்டு மரபுடன் இணைந்து வளர்ச்சியடைந்த வசந்தன் கூத்து, சடங்கு இலக்கியத்தையும் நாட்டுப்புற அரங்க மரபையும் ஒருங்கிணைத்த ஒரு தனித்துவமான பண்பாட்டு அமைப்பாக இன்றும் தொடர்கிறது. தமிழக தெருக்கூத்து, இலங்கையின் பிற நாட்டுக்கூத்து மரபுகளுடன் ஒப்பிடும்போது, மட்டக்களப்புச் சூழலில் இக்கலை மரபு பெற்றுள்ள சமூக மற்றும் நிறுவனமயமான ஆதரவு, அதன் தொடர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது எனலாம். எனினும், போர்க்கால இடப்பெயர்வு, பொருளாதார மாற்றம், இளையோர் புலம்பெயர்வு, ஊடக மயமாக்கல் ஆகியவை முன்வைக்கும் சவால்களை எதிர்கொள்ள, முறையான ஆவணப்படுத்தலும் கல்வித் திட்ட இணைப்பும் தொடர்ந்து அவசியமாகின்றன.

எனவே, வசந்தன் கூத்து சமூக ஒற்றுமை, கலாச்சார பாதுகாப்பு மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் சங்கமமாகும் மற்றும் மட்டக்களப்பில் தமிழர் சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகிறது எனலாம். இக்கலை மரபின் அருங்காட்சிய பண்பாட்டுப் பாரம்பரிய அந்தஸ்தை முறையாக அங்கீகரித்து, தொடர்ச்சியான ஆவணப்படுத்தல், கல்வி இணைப்பு மற்றும் இளந்தலைமுறையினரின் பங்கேற்பை ஊக்குவிக்கும் கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்படின், வசந்தன் கூத்து எதிர்காலத்திலும் மட்டக்களப்பு தமிழர் சமூகத்தின் பண்பாட்டு நினைவகமாகவும் அடையாளச் சின்னமாகவும் தொடர்ந்து செயல்படும் என எதிர்பார்க்கலாம்.

**உசாத்துணை நூற்பட்டியல் (MLA 9ஆம் பதிப்பு முறை)**

[1.] *கந்தையா, வி.சீ. மட்டக்களப்பின் தனித்துவம்.* Battiinfo, 26 June 2017, battiinfo.wordpress.com/2017/06/26/*மட்டக்களப்பின்-தனித்துவம்*/.

[2.] *நடராஜா, சி. மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும். இந்து வாலிபர் முன்னணி வெளியீடு*, 1980.

[3.] *பாலசுந்தரம், இ. நாட்டார் இலக்கியத்தில் வசந்தன் பாடல்கள். இளந்தென்றல்*, 1974.

[4.] *மௌனகுரு, சி. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். விபுலம் வெளியீடு*, 1998.

[5.] *சிவத்தம்பி, க., தொகுப்பாசிரியர். கற்கைநெறியாக அரங்கு. நியுசெஞ்சுரி புத்தக நிலையம்*, 1996.

[6.] *சுகந்தினி, சு. மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும். இலண்டன் தமிழ் இந்துமன்றம்*, 2006.

[7.] "Folk Narratives: Rituals and Performances (An Intangible Cultural Heritage of Tamil Nadu)." Exotic India Art, www.exoticindiaart.com/book/details/folk-narratives-rituals-and-performances-intangible-cultural-heritage-of-tamil-nadu-nan420/. Accessed 25 Aug. 2026.

[8.] "Koothu." Koothu Kalari, 17 Nov. 2008, koothukalari.blogspot.com/2008/11/koothu.html.

[9.] Krishnamoorthy, R., et al. "Dialogic Interactions in Vernacular Hinduism: A Perspective on Therukoothu, Folk Ritualistic Theatre of South India." ResearchGate, 2023, www.researchgate.net/publication/370497316. Accessed 25 Aug. 2026.

[10.]Sanjeewa, W. The Performing Artistes in Sri Lanka: The Contribution to Ethno-Religious Cohesion through Their Shaping and Challenging of Socio-Cultural Norms. 2018. U of Leeds, PhD dissertation. Academia.edu, www.academia.edu/100666714.

[11.]"Tamil Folklore Arts, Lost and Found." Tamil Culture, 22 Aug. 2011, tamilculture.com/tamil-folklore-arts-lost-and-found.

[12.]"Thambiluvil Kannaki Amman Temple." Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Thambiluvil_Kannaki_Amman_Temple. Accessed 25 Aug. 2026.

[13.]"Vattappalai Kannaki Amman Kovil." Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Vattappalai_Kannaki_Amman_Kovil. Accessed 25 Aug. 2026.

[14.]"What Influence Do the Sri Lankan Folk Theatre and Dance Traditions Have on Sri Lankan Society?" Academia.edu, 10 Aug. 2021, www.academia.edu/50817404. Accessed 25 Aug. 2026.

| Copyright © Author(s)

### ஆசிரியர் அறிவிப்பு — (Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர்/ஆசிரியர்கள், இக்கட்டுரையின் உள்ளடக்கம் தொடர்பாக எவ்வித நிதி, தொழில்சார் அல்லது தனிப்பட்ட வட்டி முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என அறிவிக்கின்றனர். இவ்வாய்வு எவ்வித வெளிநிதி உதவியும் பெறாமல் மேற்கொள்ளப்பட்டதாகும். இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களும் பகுப்பாய்வுகளும் ஆசிரியரின் சொந்தக் கருத்துக்களாகவும், மேற்கோள் காட்டப்பட்ட மூலங்களின் அடிப்படையிலான கல்விசார் விளக்கமாகவும் மட்டுமே கருதப்பட வேண்டும்.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam